# புதிய குற்றவியல் சட்டங்களை 100% நடைமுறைப்படுத்திய சண்டிகர் !

## பிரதமர் மோடி பாராட்டு



சண்டிகரில் புதிய குற்றவியல் சட்டங்களின் கீழ் நடத்தப்படும் குற்ற வழக்கு விசாரணை மாதிரி காட்சியை பார்வையிட்ட பிரதமர் நரேந்திர மோடி. உடன் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா.

**சண்டிகர், டிச 3:** மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை 100 சதவீதம் நடைமுறைப்படுத்திய முதல் அரசு நிர்வாகமாக சண்டிகர் உருவெடுத்துள்ளது என்று பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்தார்.

இந்த மூன்று சட்டங்களும் குடிமக்களின் உரிமைகள் மற்றும் நீதியின் பாதுகாவலர்களாக உருவெடுத்திருக்கின்றன எனவும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.

இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்திய சாட்சியங்கள் சட்டம் ஆகிய பிரிட்டிஷ் ஆட்சி கால சட்டங்களுக்கு மாற்றாக பாரதிய நியாய சம்ஹிதா, பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா, பாரதிய சாக்ஷிய அதினியம் ஆகிய மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை மத்திய அரசு அறிமுகம் செய்தது.

இந்தப் புதிய சட்டங்கள் கடந்த ஜூலை 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வந்தன.

இந்த மூன்று சட்டங்களையும் 100 சதவீதம் நடைமுறைப்படுத்திய முதல் யூனியன் பிரதேசமாக சண்டிகர் உருவெடுத்துள்ளது. இதைக் குறிக்கும் வகையில் சண்டிகரில் செயலாக்கிறமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதமர் மோடி, புதிய குற்றவியல் சட்டங்களை 100 சதவீதம் நடைமுறைப்படுத்தியதற்குப் பாராட்டு தெரிவித்துப் பேசியதாவது:

இந்தியாவில் காலனிய ஆட்சியின்போது 1857-இல் உருவான புரட்சி, பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் வேர்களை ஆட்டம் காணச் செய்தது. அதைத் தொடர்ந்து இந்திய தண்டனைச் சட்டத்தை (ஐபிசி) பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்தியாவில் கொண்டுவந்தனர். பின்னர், இந்திய ஆதாரச் சட்டம் மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டங்களை அமலுக்குக் கொண்டு வந்தனர்.

இந்தியர்களுக்கு தண்டனை கொடுப்பதற்காகவும், அடிமைகளாக வைத்திருக்கவுமே இந்தச் சட்டங்களை அவர்கள் கொண்டு வந்தனர். அராஜகத்துக்கும் சுரண்டலுக்குமான கருவியாக இந்தச் சட்டங்களை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் பயன்படுத்தினர்.

நூற்றாண்டுகளுக்கு மேலான அடிமை நிலைக்குப் பிறகு 1947-இல் நாடு சுதந்திரம் பெற்றது. பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் நாட்டை விட்டு வெளியேறிய நிலையில், அவர்களின் சட்டங்களிலிருந்தும் விடுதலை கிடைக்கும் என்று நாட்டு மக்கள் எண்ணினர்.

துரதிருஷ்டவசமாக, சுதந்திரம் கிடைத்த பல ஆண்டுகளுக்குப் பிறகும் நமது சட்டங்கள் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் தண்டனைச் சட்டங்களையே தழுவியிருந்தன. அதாவது, குடிமக்களை அடிமைகளாக நடத்தும் மனநிலையே தொடர்ந்துவந்தது. அவ்வப்போது, இந்தச் சட்டங்களை மேம்படுத்த சிறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், அவற்றின் தன்மை காலனிய சட்டங்களிலிருந்து மாறவில்லை. இது நாட்டின் வளர்ச்சியையும் கடுமையாகப் பாதித்தது.

இந்தச் சூழலில், தில்லி செங்கோட்டையில் ஆகஸ்ட் 15-ஆம் தேதி நடைபெற்ற சுதந்திர தின விழாவின்போது, நமது அடிமை மனநிலையை ஒழிக்க உறுதியேற்கப்பட்டது. அதன் விளைவாக, காலனிய சட்டங்களுக்கு மாற்றாக 'மக்களால்; மக்களுக்காக' என்ற நமது ஜனநாயக அடிப்படை தத்துவத்தின்படி பாரதிய நியாய சம்ஹிதா, பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா, பாரதிய சாக்ஷிய அதினியம் ஆகிய மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இதில், சமத்துவம், நல்லிணக்கம், சமூக நீதி ஆகிய சித்தாந்தங்களுடன் பாரதிய நியாய சம்ஹிதா சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய சட்டத்தின் கீழ், பாலியல் வன்கொடுமை போன்ற கொடூர குற்றங்களில், விசாரணை தொடங்கிய 60 நாள்களுக்குள் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு, அடுத்த 45 நாள்களுக்குள் விசாரணை முடிக்கப்பட்டு குற்றவாளிக்கு தண்டனை வழங்கப்பட்டுவிடும். 'குடிமக்களே முதன்மையானவர்கள்' என்பதே இந்தப் புதிய சட்டத்தின் தாரக மந்திரம்.

அந்த வகையில், இந்தப் புதிய சட்டங்கள் குடிமக்களின் உரிமைகளின் பாதுகாவலர்களாக உருவெடுத்துள்ளன. எளிதில் நீதி கிடைப்பதையும் உறுதி செய்கின்றன. இந்தச் சட்டங்களை 100 சதவீதம் நடைமுறைப்படுத்தி, சத்தியத்தையும் நீதியையும் நிலைநாட்டும் கடவுள் சக்தியின் வடிவமாக சண்டீகர் உருவெடுத்துள்ளது என்றார்.